# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 7/2020** **Date:12.02.2026.**

**(PW2)- சுயம்புகனி**

**1,3,4** ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. நான் பெரிய ஆற்றங்கரையில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் தொழில் செய்கிறேன் என்றால் கொத்தனார் வேலைக்கும் செல்வேன், கட்டில் கட்டுவேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 7 ம் வகுப்பு படித்துள்ளேன், எனக்கு எழுத படிக்க தெரியும். எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் இரண்டு ஆண் மற்றும் இரண்டு பெண் குழந்தைகள். நான் குடியிருந்து வரும் இடம் அரசு புறம்போக்கு என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை வாதி கூறி அதன் அடிப்படையில் சாட்சியம அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் இதற்கு முன்பும் இரணியல் நீதிமன்றத்தில் வேறு வழக்குகளில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

2. நான் இந்த வழக்கில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. இத்ந வழக்கின் வாதியின் பெயர் என்ன என்றால் மரிய மிக்கேல் மற்றும் மரிய பிரான்சிஸ் ஆவர் பிரதிவாதியின் பெயர் என்ன என்றால் மரிய பிரான்சிஸ் ஆகும். இந்த வழக்கில் வாதி என்ன பரிகாரம் கோரி உள்ளார் என்றால் பிரதிவாதியிடம் சொத்தை எழுதி கேட்டு தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு சர்வே எண் சொத்தில் மொத்தம் எவ்வளவு செண்ட் சொத்து உள்ளது என்றால் 4 செண்ட் சொத்து உள்ளது. எனக்கு இத்ந வழக்கு குறித்து எந்த விபரமும் தெரியாது என்றாலும் வாதி அழைத்ததன் பேரில் வாதிக்காக பொய்யாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

3. வாதி வா.சா.ஆ.5 ஆவணம் எழுதும் போது நான் உடன் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் மேற்படி ஆவணத்தில் என்ன எழுதி இருக்கிறார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் முழு விபரம் தெரியாது. மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் தெரியாது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் எவ்வளவு செண்ட் சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 4 செண்ட் சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் உள்ள சொத்து மொத்த சொத்தில் எந்த திசையில் அமைந்துள்ளது என்றால் தெற்கு அத்தத்தில் அமைந்துள்ளது. சூசைமிக்கேல் எழுதி கொடுத்த பத்திரம் ரூ 50 அல்லது ரூ. 100 பத்திரமா என்றால் பத்திரத்தில் எழுத வில்லை வெறும் தாளில் எழுதி கொடுத்தார்கள்.

4. plain paper ல் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். வாதி சூசைமிக்கேல் இடம் ரூ. 50 கட்டுகளாகவா, ரூ. 200 கட்டுகளாக பணத்தை கொடுத்தார் என்றால் ரூ. 100 கட்டாக கொடுத்தார். மேற்படி ஆவணத்தில் சாட்சி கையெழுத்திட்ட நபர்களின் பெயர் மற்றும் முகவரி எழுதப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கு பிரதிவாதிகளை தாவா சம்பவம் நடைபெறுவதற்கு முன்பும் பின்பும் தெரியாது என்றால் சரியல்ல, நான் 3ம் பிரதிவாதியின் கணவருடன் வேலைக்கு செல்வேன். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒப்பம்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல்